UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

Published on 14, January -2024 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# திருக்குறள் மலையாள மொழிபெயர்ப்புகள் வழி பனுவல் உருவாக்கம்

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

**முனைவர் ப.குணசுந்தரி**
உதவிப்பேராசிரியர், தமிழ்
தொலைமுறை மற்றும் இணையவழிக் கல்விமையம்
பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்

**கட்டுரைச்சுருக்கம்**

தமிழ் இலக்கிய வகைமையினுள் அறநூல் வரிசையில் முதலாவதாக இடம்பெறும் திருக்குறள் மிகுதியான பதிப்புகளையும் உரைகளையும் மொழிபெயர்ப்பினையும் பெற்ற ஒரே நூல் என்ற பெருமைக்குரியது. இந்நூலின் மற்றொரு சிறப்பு மனிதகுலம் ஏற்று பின்பற்றக்கூடிய அறநெறிகளைப் பதிவுசெய்திருக்கும் காரணத்தினால் உலகமொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதாகும். ஆயினும் இக்கட்டுரை மலையாள மொழியில் திருக்குறள் மொழிபெயர்க்கப்படும்போது மூலநூலின் கருத்தைச் சிதைக்காமல் மொழிபெயர்ப்பாளர்கள் என்னென்ன முறைகளைக் கையாண்டிருக்கின்றனர் என்பதை ஆய்வு செய்கின்றது. மேலும் பலர் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டிருந்தாலும் மூவர் மொழிபெயர்ப்பு மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச்சொல்**

பனுவல், மொழிபெயர்ப்பு, ஒலிபெயர்ப்பு, உள்ளடக்கம், இயல், பகுப்பு, முகக்குறி,

## அறிமுகம்

தமிழில் வழங்கும் அற இலக்கியங்களுள் உலகம் போற்றும் சிறப்புடைய திருக்குறள், இன்றளவும் தமிழில் மட்டுமல்லாது பிற மொழிகளிலிலும் புத்துரை செய்யப்பட்டு, மொழிபெயர்ப்பில் பொலிவுடன் தனி நூலாகவே வலம் வருகின்றது. அவ்வகையில் திராவிட மொழிக்குடும்பத்தைச் சார்ந்த மலையாளத்தில் இவ்வறநூல் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக்கும் போக்கில் மலையாள மொழியில்; உருவாகிவரும் திருக்குறள் சார்ந்த பனுவல் உருவாக்கம் குறித்த கருத்துக்களைத் தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் இக்கட்டுரை முன்வைக்கிறது.

## பனுவல் உருவாக்கம் - சில கருத்து

பனுவல் எனும் சொல் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் சொல் (நூற்பா.96:) எனும் பொருளிலும் நன்னூலின் எழுத்ததிகாரத்தில் செய்யுள் என்றும் (நூற்பா 24:1) நூல் என்றும் (நூற்பா 54:2) பொருள்பட வந்துள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரகராதி; புறநானூற்றில் பஞ்சு (பாடல்125:) ,பாட்டு (பாடல் 135:) ,கேள்வி (பாடல்.237:) எனும் பொருளிலும் சீவக சிந்தாமணியில் ஆராய்ச்சி (464:) எனும் பொருளிலும் திருக்குறளில் நூல் (21:2) எனும் பொருளிலும் பிங்கல நிகண்டில் கல்வி எனும் பொருளிலும் வந்துள்ளதாக எடுத்துக்காட்டுகிறது. செந்தமிழ்ச்

சொற்பிறப்பியல் பேரகரமுதலியும் பனுவல் என்பதற்கு இப்பொருளையே தருகிறது. (பக்.499) தமிழ் - தமிழ் அகர முதலி பனுவல் என்பதற்குப் பன்னப்பட்ட பஞ்சு, பஞ்சி நூல், சொல், பாட்டு, நூல், கேள்வி, கல்வி, ஆராய்ச்சி என மேற்குறித்த சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரகராதி தரும்; பொருளையே தருகின்றது. (பக்.740)

இவற்றிலிருந்து பனுவல் என்பது நம் ஆய்வுக்குத் தொடர்புடைய சொல், பாட்டு, நூல், கேள்வி, கல்வி எனும் பொருட்களை உணர்த்த வருவதாகக் கொள்ளலாம்.

தாய் மொழியில் இயற்றப்படும் பனுவலினைப் போன்றே பிற மொழிகளில் இருந்து ஒலிபெயர்ப்பு முறையிலோ (Translitration Method) மொழிபெயர்ப்பு முறையிலோ (Times New Roman) உரை நூல் செய்யப்படும்பொழுது அது பனுவல் என்ற தகுதியைப் பெறுமா என்றால் ஆம் பெறும். எப்பொழுதென்றால் மொழிபெயர்ப்பாளன் எம்மொழியிலிருந்து நூலினை மொழிபெயர்க்கிறானோ முதலில் அம்மொழி நூலினைப் பற்றிய அறிவும் அம்மொழியில் மட்டுமன்றி மொழிபெயர்ப்பு செய்யும் மொழியிலும் அறிவுடையவனாக இருக்கவேண்டும். அத்திறம் பெற்றிருந்தால் மட்டும்தான் சொல்லில், சொற்பொருளில், தொடரில் மாற்றத்தை ஏற்படுத்தும் பொழுதுஅது மூலநூலின் உட்கருத்தை முழுவதுமாகச் சிதைத்துவிடாமல் காத்து தன் பண்பாட்டு வழமைக்கு ஏற்றவகையில் அமைக்க முடியும். செய்யப்படும்; இலக்கியமும் பனுவல் தகுதியைப் பெறும். அவ்வகையில் மொழிபெயர்ப்பாளர்களால் மலையாளத்தில்; மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ள திருக்குறள் மலையாளப் பனுவலாகவே மாற்றப்பட்டுள்ளமுறை இங்கு எடுத்துரைக்கப்படுகிறது.

## திருக்குறளை மலையாள மொழியில் மொழிபெயர்த்த மொழிபெயர்ப்பாளர்களும் மொழிபெயர்ப்பும்

திருக்குறளை மலையாள மொழியில் மொழிபெயர்ப்பு செய்தவர்கள் பலர்.அவர்கள் பற்றிய விவரங்களைத் திரு எஸ். ரமேஷின் நாயர் அவர்களின் மொழிபெயர்ப்புப் பனுவலில் இடம்பெறும் திருக்குறள் மலையாளத்தில் எனும் தலைப்பில் எழுதப்பட்ட பேரா. வட்டப்பறம்பில் கோபிநாதப்பிள்ளை அவர்களின் கருத்துக்களிலிருந்தும் திரு கெ.ஜி.சந்திரசேகரன் நாயர் அவர்களின் மொழிபெயர்ப்புப் பனுவலில் இடம்பெறும் பேரா. வி. விநாயகப்பெருமாள் அவர்களின் திருக்குறள் எனும் தலைப்பில் அமைந்த கருத்துக்களிலிருந்தும் **WWW.TAMILAUTHORS.COM** எனும் இணையதளத்தில் பிறமொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகள் எனும் தலைப்பில் கல்பனா சேக்கிழார் தரும் தரவுகளிலிருந்தும் அறியமுடிகிறது. அவர் 1595 தொடங்கி 2003 வரையில் அச்சிடப்படாத, அச்சிடப்பட்ட நூல்களில் விவரத்தைக் குறிப்பிடுகின்றார்.

மொழிபெயர்ப்பாளர்கள் பலர் இருப்பினும் அவர்களில் திருக்குறளுக்கு முழுமையாக உரை எழுதியவர்கள் சிலரே. அவர்களுள் வெண்ணிகுலம் கோபால குருப்பு, எஸ்.ரமேஷன் நாயர், கெ.ஜி.சந்திரசேகரன் நாயர் ஆகிய மூவர் மொழிபெயர்ப்புப் பனுவல் மட்டும் இங்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இவர்களின் பனுவல்கள் புரிதல் நோக்கில் பின்வரும் போக்கில் அணுகப்படுகிறது. அவை

- மொழிபெயர்ப்பாளர்கள்
- அதிகாரப் பெயர்களும் சொல்லமைப்பும்
- குறள் அமைப்பும் பொருள்விளக்கமும்

- *மொழிபெயர்ப்பு முறை என்பனவாகும்.*

**மொழிபெயர்ப்பாளர்கள்**

**வெண்ணிகுலம் கோபால குருப்பு**

*1957இல் தன் திருக்குறள் மொழிபெயர்ப்பு நூலின் முன்னுரையில் எழுதும் குறிப்புகளில் இருந்தே இவரைப்பற்றி அறியமுடிகிறது. அதுவும் முழுமையானதல்ல.*

*ஆசிரியப்பணியில் இருந்ததாகக் கூறும் இவர் தான் திருவனந்தபரத்தில் இருக்கும்வரை திராவிட இலக்கியங்களைப் பற்றி பெயரளவில் அறிந்திருந்ததாகவும் ஒரு துறவியின் தொடர்பில் அவர்பாடிய திருக்குறளின் இனிமையில் ஈடுபட்டு குறளைப் படிப்பதற்காகவேணும் தமிழைப் படிக்க வேண்டும் என்றுவிரும்பியதாகவும் அம்முயற்சியில்* **திரு ஈ. வி.ராம நம்பூதிரி நாயன் பிள்ளையைக்** *குருவாகக்கொண்டு தமிழ் பயின்று பின்னாளில் திருக்குறளை மொழிபெயர்க்கும் நிலையை அடைந்ததாகவும் கூறுகிறார்.*

*திருக்குறளை இவர் மொழிபெயர்ப்பு செய்ததற்கு அடிப்படையாக* ***800*** **ஆண்டுகள் பழைமை உடைய பரிமேலழகர் உரையும்** *அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த* **மகாகவி** *எனும் பெயருடைய* **இராமலிங்கம்பிள்ளையின் புதுவுரையும்** *(வித்வான் தண்டபாணி தேசிகருடைய தர்ம்மாதீனப் பதிப்பு) இருந்ததாக முன்னுரையில் குறிப்பிடுகிறார்.*

**மொழிபெயர்ப்புப் பனுவல் அமைப்பு**

*இவரின் மொழிபெயர்ப்புப் பனுவல்* **திருக்குறள் விவர்த்தனம்** *எனும் பெயரில் அமைகின்றது. நூலின் தொடக்கத்தில்* **விஷய விவரம்** *(*വിഷയവിവരം*) எனும் தலைப்பில் நூலினுள் உள்ள தகவல்களின் தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.*

*முதலில் முன்னுரை (*ആമുഖം*) , கருத்து (*അഭിപ്രായം*), நூலின்புகழ் (தமிழில் உள்ள திருவள்ளுவ மாலை) (*കാവ്യപ്രശസ്തി*) மற்றும் நூலின் மூவகைப் பகுப்பும் பகுப்புள் இடம்பெறும் இயலும் தரப்பட்டுள்ளன. அதிகாரத் தலைப்புகள் இங்குத் தரப்படவில்லை. மாறாக பக்கம் 11இல் உள்ளடக்கம் என்று தலைப்பிடப்பட்டு பத்திமுறையில் நூலினுள் அதிகாரம் இடம்பெற்றுள்ள முறைமை விளக்கப்படுகிறது. இம்முறை புரிதலில் மயக்கத்தை ஏற்படுத்தும். குறள் இடம்பெறும் இடத்தில் பகுப்பு, இயல், அதிகாரம் பின்னர் குறள் என வைக்கப்பட்டுள்ளது. (தர்ம்மபத்ததி – மங்களாசரணம் - அதிகாரம் -1 - ஈஷ்வரஸ்துதி – மொழிபெயர்ப்பு குறள்)*

*அடுத்து விஷய விவரத்தலைப்புகளுக்கு இடையிடையே சிறு தலைப்புகளின் கீழ் மூலஆசிரியனின் மூல நூலின் சிறப்புகள் பேசப்பட்டுள்ளன.*

*நூலில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள குறள் அனைத்திலும் எளிய மலையாள சொற் கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மூலவடிவம் மொழிபெயர்ப்பில் இடம்பெறவில்லை. மொழிபெயர்ப்பும் மிகச் சுருக்கமான உரையும் மட்டுமே இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு இயலின் இறுதியிலும் பகுப்பின் இறுதியிலும் இயல் மற்றும் பகுப்பின் தலைப்பிட்டு நிறைவு சுட்டப்பட்டுள்ளது. உ.ம்*

*இயல் முடிவு : மலையாளம் : மங்களாசரணம் கழிந்தது.* (മംഗളാചരണം കഴിഞ്ഞു)

*தமிழ் : பாயிரம் முற்றும்*

*பகுப்பு முடிவு : மலையாளம் : தர்ம்மப்பத்ததியில் சந்ந்யா~;ரமதர்ம்மம் கழிந்தது*

(ധര്മ്മപദ്ധതിഉടല്സന്ന്യാസാശ്രമധര്മ്മം കഴിഞ്ഞു)

: *தமிழ் : அறத்துப்பாலில் துறவறவியல் முற்றும்*

முப்பால் பகுப்பினை ஏற்கும் மொழிபெயர்ப்பாளர் இயல் பகுப்பு முறையில் சற்று வேறுபடுகிறார். ஊழ் எனும் அதிகாரத்தைத் தனி இயலாகக் கொள்ளாது அதனைத் துறவறவியலுள் ஒன்றாகச் சேர்த்துள்ளார். அதைப் போலவே பொருட்பாலில் இடம்பெறும் ஒழிபியலைத் தனி இயலாகக் கொள்ளாமல் அங்கவியலோடு இணைத்துள்ளார். இறுதியில் அதிகார சூசிக (அதிகார உள்ளடக்கம்) இடம் பெற்றுள்ளது.

**எஸ்.ரமேஷன் நாயர்**

1948மெய் மூன்றில் கன்யாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டத்தில் உள்ள சோத்த நல்லூர் கிராமத்தில் இருந்த குமாரபுரத்தில் பிறந்த இவர்கவிதை, நாடகம், பக்திப்பாடல்கள், சிறுவர் இலக்கியம்; என நூற்றுக்குமேற்பட்ட நூல்களைப் படைத்திருக்கின்றார். அவரின் படைப்புகளுக்காகப் பல்வேறு விருதுகள் பல்வேறு அமைப்புகளிலிருந்தும் வழங்கப்பட்டிருக்கின்றன.

தன் 15ஆவது வயதில் முதல் குறளை மலையாளத்தில் மொழிபெயர்த்ததாகக் கூறும் இவர் தொடக்கத்தில் கவித்துவ நடையில் அன்றி நீண்ட வாக்கியங்களாக இருந்த தன் மொழிபெயர்ப்பை மேம்படுத்தும் வகையில்; தமிழையும் மலையாளத்தையும் நன்கு அறிந்து பத்து ஆண்டுகள் தளரா முயற்சிக்குப் பின்னர் இம்மொழி பெயர்ப்பைச் செய்துள்ளதாகக் கூறுகின்றார். (பேரா. வட்டப்பறம்பில் கோபிநாதப்பிள்ளை, திருக்குறள் மலையாளத்தில் பக்.20—21) 1989 டிசம்பர் முதல் ஐந்து வருடங்கள் குங்குமம் இதழில், இவரின் திருக்குறள் மொழிபெயர்ப்பு ஒவ்வொரு அதிகாரமாக வெளிவந்துள்ளது. பின்னர் இம்மொழிபெயர்ப்பினைச் செம்மை செய்து 1998இல் முழுமையான உரையுடன்கூடிய சிறந்த பதிப்பாக வெளியிட்டுள்ளார்.

**மொழிபெயர்ப்புப் பனுவல் அமைப்பு**

இவரின் மொழிபெயர்ப்புப் பனுவல் திருவள்ளுவர் திருக்குறள் விவர்த்தனம் எனும் பெயரில் அமைகின்றது. நூலின் தொடக்கத்தில் டி.ஸி வெளியீட்டாளர் ரவி அவர்கள் திரு எஸ். ரமே~ன் நாயர்; அவர்களின் மொழிபெயர்ப்பு குறித்த கருத்துக்களை പ്രസാധകക്കുറിപ്പു எனும் பெயரில் தந்துள்ளார். (ஜுலை 16, 2014 கோட்டயம்) .அடுத்து திருக்குறள் (തിരുക്കുറൾ) எனும் தலைப்பில் பேரா. வி. விநாயக பெருமாள் (செயலாளர், சைவபிரகாச சபை 6.10.1998, எம்.2, ஜவகர் நகர், திருவனந்தபுரம் 41) அவர்கள் திரு எஸ். ரமேஷன் நாயர்; அவர்களின் மொழிபெயர்ப்பின் தன்மை பற்றி எழுதியுள்ளார். (பக்.7 – 11)

தொடர்ந்து திருக்குறள் மலையாளத்தில் (തിരുക്കുറൾമലെയാളത്തിൽ) எனும் தலைப்பில் இதுவரை மலையாளத்தில் செய்யப்பட்ட திருக்குறள் மொழிபெயர்ப்புகள் குறித்த தகவல்கள் இடம்பெறுகின்றன. மேலும் கி.பி. 1595இல் வெளிவந்த திருக்குறள் மொழிபெயர்ப்பு மற்றும் எ. கோபிநாதபிள்ளை, வடயாற்றுக்கோட்ட பரமே~;வரன்பிள்ளை, சாஸ்தமங்கலம் ராமகிருஷ்ணபிள்ளை, வெண்ணிகுலம் நான்காம் பதிப்பு, மலமல் கோபால பணிக்கர் ஆகியோர்களுடைய மொழிபெயர்ப்புகள் சிலவற்றைக் கொடுத்து அதிலிருந்து திரு எஸ். ரமேஷன்நாயர்; அவர்களின் மொழிபெயர்ப்பு அமைந்திருக்கும் விதத்தினைச் சான்றுடன் பேரா.வட்டப் பறம்பில் கோபிநாதபிள்ளை எடுத்துக் காட்டியுள்ளார். (பக்.12 – 21)

THE HINDU ஆங்கில நாளேட்டில் 31, ஜுலை 1998இல் பேராசிரியர் ஸ்ரீவராஹம் பாலகிருஷ்ணன் அவர்கள் CAPTURING THE SPIRIT OF THE ORIGIONAL எனும் தலைப்பிலும்; 1999இல் இந்து நாளேடு literary flourish beyond barriers எனும் தலைப்பிலும் திரு எஸ். ரமேஷன் நாயர்; அவர்களின் மொழிபெயர்ப்பு குறித்து

பேசுகின்றனர். அடுத்து திரு. எஸ். ரமேஷன் நாயர் அவர்கள் மூன்றாம் பதிப்பின் ஒரு முகக்குறி எனும் தலைப்பில் தன் எட்டு வயதில் 1956 நவம்பர்-1இல் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டிலிருந்து பிரிக்கப்பட்டபோது மொழி, பண்பாடு என எல்லா நிலையிலும் ஒதுங்கிப்போன சூழல் ஏற்படுத்திய வலியிலும் திருக்குறள் மீதிருந்த ஆர்வத்தையும் மொழிபெயர்ப்புச் செய்யப்புகும் காலத்து சிந்தித்தவையும் மேற்கொண்ட முயற்சிகளையும் தனக்கு உதவியவர்களைப் பற்றியும் விளக்கமாக எடுத்துக்காட்டுகின்றார்.

அடுத்து உள்ளடக்கம் (ഉള്ളടക്കം) இடம்பெறுகிறது. அதில் முதலில் அதிகார சூசிக தலைப்பும் (அதிகார உள்ளடக்கம்) முப்பால் பகுப்பும் இயல்பகுப்பும் இடம்பெறுகின்றன. அதிகாரம் இயல்பகுப்பில் இடம்பெறாமல் தனியே அதிகார சூசிக எனும் தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது. பக்க எண்ணைக் கொண்டுதான் அதிகாரம் எவ்வியலில் இடம்பெற்றுள்ளது என்பதைக் கண்டறிய இயலும். பார்த்த உடனே பகுப்பு, இயல், அதிகாரம் என மூன்றையும் ஒரே இடத்தில் அறிந்துகொள்ளும் வகையிலான எளிய முறையாக இது இல்லை. உள்ளடக்கத்திலும் அதிகார சூசிகயிலும் இடம்பெறும் பெயர்கள் அனைத்தும் ஒலிபெயர்ப்பில் அன்றி மலையாள மொழிபெயர்ப்பிலேயே இடம்பெற்றுள்ளன.

பனுவலில் இவரின் மொழிபெயர்ப்பு திருக்குறள் தமிழ் மூலம் - மொழிபெயர்ப்பு - சொற்பொருள் - கருத்து எனும் முறையில் அமைக்கப்பட்டுள்ளது. உரையின் தொடக்கத்தில் பகுப்பும் இயலும் தர்ம்மப்ரகரணம் - மங்கலாசரணம் என மலையாளத்திலும் அதிகாரம், அதிகாரம் -1 (അധികാരം) எனவும் அதிகாரத்தலைப்பு (கடவுள் வாழ்த்து - കടവുള് വാഴ്ത്തു) என மலையாள ஒலிபெயர்ப்பிலும் **தைவஸ்துதி** (ദൈവസ്തുതി) எனமலையாள மொழியாக்கத்திலும் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு இயலின் இறுதியிலும் பகுப்பின் இறுதியிலும் இயல் மற்றும் பகுப்பின் தலைப்பிட்டு நிறைவு சுட்டப்பட்டுள்ளது. உ.ம்

**இயல் முடிவு** : மலையாளம் : மங்களாசரணம் சமாப்தம். (മംഗളാചരണം സമാപ്തം)

தமிழ் : பாயிரம் முற்றும்

மலையாளம் : தர்ம்மப்ரகரணம் ப்ரதமகண்டம் க்ருஹஸ்தா~;ரமம் சமாபிச்சு

(ധര്മ്മപ്രകരണംപ്രഥമ ഖണ്ഡം ഗൃഹസ്ഥാശ്രമം സമാപിച്ചു)

தமிழ் : அறத்துப்பாலில் இல்லறவியல் முற்றும்

பகுப்பு முடிவு மலையாளம்: தர்ம்மப்ரகரணம் ஸமாபிக்குந்நு (ധര്മ്മപ്രകരണം സമാപിക്കുന്നു)

தமிழ் : அறத்துப்பால்; முற்றும்

முப்பால் பகுப்பினை ஏற்கும் மொழிபெயர்ப்பாளர் வெண்ணிகுலம் கோபால குருப்பு போலவே அறத்துப்பாலில் இடம்பெறும் **ஊழினை** தனி இயலாகக் கொள்ளாமல் அதிகாரமாகக் கொண்டு அதனைத் துறவறவியலில் சேர்த்துள்ளார். அதைப் போலவே பொருட்பாலில் இடம்பெறும் ஒழிபியலைத் தனி இயலாகக் கொள்ளாமல் **அங்கவியலோடு** இணைத்துள்ளார்.

**கெ. ஜி. சந்திரசேகரன் நாயர்**

1937 நவம்பரில் நெய்யாற்றின் கரை கடந்த அமரவிள எனும் ஊரில் பிறந்த இவர் தொடக்கக் கல்வியினை அமரவிளயிலும் இடைநிலைக்கல்வியை ஆருவாமொழியிலும் உயர்நிலைக்கல்வியை நாகர்கோவிலில் உள்ள எஸ்.எல்.பி-யிலும் முடித்துள்ளார். உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போதே அலிகார் பல்கலைக்கழகத்தில் ஹிந்தி

இலக்கியத்தில் தேர்ச்சியடைந்ததால் விருதும் பெற்றுள்ளார். ஸ்காட் கிறிஸ்டியன் கல்லூரியில் படிக்கும் போது சென்னைப் பல்கலைக்கழகத்தில் பொருளாதார சாத்திரத்தில் விருது கிடைத்துள்ளது. 1959 முதல் 1995 வரை தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறைப் பிரிவில் அரசு ஊழியராகப் பணியாற்றிய இவர் மலையாளம,; தமிழ,; ஹிந்தி ஆகிய மொழிகளில் புலமை பெற்றவராகவும் இருந்துள்ளார். (திருக்குறள், திருவள்ளுவர், ஸம்பூர்ண பாஷ்யம் - நூலின் குறிப்புரையிலிருந்து எடுக்கப்பட்டது)

மொழிபெயர்ப்பாளர் தன்னுடைய திருக்குறள் திருவள்ளுவர் சம்பூர்ண பாஷ்யம் (திருக்குறள் திருவள்ளுவர் முழுமை பதிப்பு) எனும் மொழிபெயர்ப்பு நூலின் நன்றியுரையின் தொடக்கத்தில்

***“தமிழ் மொழியில் திருவள்ளுவர் எனும் முனிவரால் எழுதப்பட்ட உலகப் புகழ்பெற்றதாக இருக்கின்ற உலக மறைநூலான திருக்குறள் வேறுபட்ட அரசுகள,; வேறுபட்ட மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருந்தாலும்மூல நூலினுடைய உள்நிலையை (கருத்தை) ஏற்றார்போல் உட்கொண்ட மொழி அமைப்பிலுள்ள கட்டமைப்புகள் பிற மொழிகளில் எல்லாம் இல்லை.”*** (நன்றி (നന്ദി) , பக். 7) என்று குறிப்பிட்டுதன் மொழிபெயர்ப்புப் பனுவலை, தன்னை வளர்த்து ஆளாக்கிய தாய் தந்தைக்கும் சகோதரனுக்கும் தமிழ் கற்றுத்தந்த ஆசான்களுக்கும் தன் நாட்டுக்கும் காணிக்கை ஆக்குகிறார். மேலும் முதல்பதிப்பு 2002இல் வெளிவந்தபோது மூன்று மாதங்களுக்குள் விற்று முடிந்ததையும் மீண்டும் இப்பனுவலை 2003இல் டி.ஸி. பதிப்பகத்தார் மறுபதிப்பு செய்ய முன்வந்தது மதிப்பையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துவதாகக் கூறுகிறார்.

டி.ஸி புத்தக வெளியீட்டாளர் குறிப்பில் “திருக்குறள் மூலம் முழுமையான விளக்கவுரையுடனானது இந்நூல். உரையினை எழுதியிருப்பது திரு கெ.ஜி. சந்திரசேகரன் நாயர். திருக்குறளின் உட்கருத்தைச் சித்தரிக்கும் இதுபடிப்பவர் அனைவருக்கும் ஒளியூட்டும் இலக்கியமாக உரை செய்யப்பட்டிருக்கிறது. சந்திரசேகரன் நாயருக்கு நன்றி” (டி.ஸி புத்தக வெளியீட்டாளர் குறிப்பு,பக்.5) என்றிருப்பதிலிருந்து இவர் மொழிபெயர்ப்புப் பனுவல் மற்ற மலையாள மொழிபெயர்ப்புகளிலிருந்து வேறுபட்டிருப்பதை அறியமுடிகிறது.

## மொழிபெயர்ப்புப் பனுவல் அமைப்பு

இவரின் மொழிபெயர்ப்புப் பனுவல் திருக்குறள் திருவள்ளுவர் சம்பூர்ண பாஷ்யம் (திருக்குறள் திருவள்ளுவர் முழுமை பதிப்பு) எனும் பெயரில் அமைகின்றது. நூலின் தொடக்கத்தில் டி.ஸி புத்தக வெளியீட்டாளர் குறிப்பும்; திரு கெ.ஜி. சந்திரசேரன் நாயருடைய நன்றியும் திருவனந்தபுரம் தமி;ழ்ச் சங்கத்தின் தலைவர் திரு வி.விநாயக பெருமாள் அவர்களின் விரிவான முன்னுரையும் (அவதாரிக അവതാരിക) மருத்துவர் கெ. அய்யப்பப்பணிக்கர் அவர்களின் குறள்பெருமையும் திருவனந்தபுரம் மருத்துவர் ஜி. பாலமோகன் தம்பியின் An Observation எனும் தலைப்பிலமைந்த கருத்தும் அடுத்தடுத்து அமைகின்றன.

மொழிபெயர்ப்பாளர் பால், இயல், அதிகார வைப்புமுறையில் பரிமேலழகரைப் பின்பற்றுகிறார். பனுவலில் உள்ளடக்கம் என்ற வார்த்தை இல்லை. அதற்குப் பதிலாகத் திருக்குறள் - அதிகார விவரணம் (അധികാര വിവരണം) என்றிருக்கின்றது. அடுத்து1. அறத்துப்பால் (தர்ம்மமார்கம்) என்று பாலும் அதன்கீழ் இயல்கள் 1. பாயிரம் 2. இல்லறம் 3. துறவறம் 4. ஊழ் எனவும் நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளன. அறத்துப்பாலில் ஊழும் பொருட்பாலில் ஒழிபியலும் தனி இயலாகவே காட்டப்பட்டுள்ளன. இயல் ஒவ்வொன்றன் கீழும் அதற்குரிய அதிகாரத்

*தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இம்முறை மூன்று பிரிவிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவர் உரைநூல் செய்நேர்த்தி யாவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்திருப்பது சிறப்புக்குரியது.*

*அடுத்து திருக்குறள் எனும் தலைப்பின்கீழ் மூலத் தமிழ்க்குறளின் சிறப்பு எடுத்துரைக்கப்படுகிறது. தொடர்ந்து மொழிபெயர்ப்பு அமைகின்றது. மொழிபெயர்ப்பின் தொடக்கத்தில் அறத்துப்பாலும் அறத்துப்பாலில் இடம்பெறும் இயல்களும் குறிப்பிடப்படுகின்றன. அடுத்து அறத்துப்பால் எனும் தலைப்பில் அதற்குரிய விரிவான விளக்கமும் பாயிரம் எனும் தலைப்பில் அதற்குரிய விரிவான விளக்கமும் தரப்பட்டுள்ளது. மேற்குறித்த இத்தமிழ்ச்;சொற்கள் பனுவலில் மலையாள ஒலிபெயர்ப்பில் குறிக்கப்பட்டுள்ளன.*

*உரையின் தொடக்கம் அதிகாரம் 1 – கடவுள் வாழ்த்து (தைவஸ்துதி) — மூலக்குறளின் மலையாள ஒலிபெயர்ப்பு – சொற்பொருள் — கருத்து – விளக்கம் என அமைகின்றது. வெண்ணிகுலம் கோபால குருப்பு மற்றும் எஸ். ரமே~ன் நாயர் ஆகிய இருவர் பனுவலில் பின்பற்றப்பட்டுள்ளது போன்றே ஒவ்வொரு இயலின் இறுதியிலும் பகுப்பின் இறுதியிலும் இயல் மற்றும் பகுப்பின் தலைப்பிடப்பட்டு நிறைவு சுட்டப்பட்டுள்ளது. பனுவலின் இறுதியில் திருக்குறளின் பெருமை கூறும் திருவள்ளுவமாலை இடம்பெறுகின்றது.*

*மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் மூன்று ஆசிரியர்களின் மொழிபெயர்ப்புப் பனுவல்களின் சிறப்பறிய இங்குப் பால் மற்றும் இயலின் வைப்புமுறை ஒருங்கே தொகுத்துச் சுட்டப்படுகிறது.*

*பால் பகுப்பு முறை*

| வ. எண் | தமிழ் | மலையாளம் | | |
|---|---|---|---|---|
| | பால் | வெண்ணிகுலம் கோபால குருப்பு | எஸ். ரமே'ன் நாயர் | கெ.ஜி. சந்திரசேகரன் நாயர் |
| 1. | அறத்துப்பால் (அறத்துப்பால்) | தர்ம்மபத்ததி (ധര്മ്മപദ്ധതി) | தர்ம்மப்ரகரணம் (ധര്മ്മപ്രകരണം) | தர்ம்மமார்க்கம் (ധര്മ്മമാര്ഗ്ഗം) |
| 2. | பொருட்பால் (പൊരുട്പാല്) | அர்த்தப்பத்ததி (അര്ത്ഥപദ്ധതി) | அர்த்தப்ரகரணம் (അര്ത്ഥപ്രകരണം) | அர்த்தமார்க்கம் (അര്ത്ഥമാര്ഗ്ഗം) |
| 3. | காமத்துப்பால் (കാമത്തുപ്പാല്) | காமபத்ததி (കാമപദ്ധതി) | காமப்ரகரணம் (കാമപ്രകരണം) | இன்பம் (ഇന്പം) |

*முப்பால் பகுப்பு முறையை ஏற்கும்மூவரும் முப்பால்களின் பெயர்களைவேறுபட மொழிபெயர்த்திருப்பதைக் காணமுடிகிறது. அதிலும் அறம், பொருள், காமம் சுட்டுவதில் பெரும்பாலும் ஒத்திருக்க பால் எனும் பெயர் பத்ததி (திட்டம்) என்றும் ப்ரகரணம் (செயல்முறை) என்றும் மார்க்கம் (நெறி) என்றும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. தமிழில் காமத்துப்பால் இன்பத்துப்பால் என்றும் அழைக்கப்படும். சந்திரசேகரன் நாயர் காமத்துப்பாலைத் தம் பனுவலில் இன்பம் என்றே குறிக்கின்றார்.*

இயல் பாகுபாடு

| வ. எண் | தமிழ் | | மலையாளம் | | |
|---|---|---|---|---|---|
| | பால் | இயல் | வெண்ணிகுலம் கோபால குருப்பு | எஸ். ரமே'ன் நாயர் | கெ.ஜி. சந்திரசேகரன் நாயர் |
| 1. | அறத்துப்பால் (அறத்துப்பால்) | பாயிரம் (பாயிரம்) | மங்களாசரணம் (மங்ஙளாஸ்சரணம்) | மங்களாசரணம் (மங்ஙளாஸ்சரணம்) | ஆமுகம் (ஆமுகம்) |
| | | இல்லறம் (இல்லறம்) | க்ருஹஸ்தா'ரம தர்ம்மம் (஗்ருஹஸ்தாஶ்ரம தர்ம்மம்) | கார்ஹஸ்த்யம் (காா்ஹஸ்த்யம்) | கார்ஹஸ்த்யம் (காா்ஹஸ்த்யம்) |
| | | துறவறம் (துறவறம்) | ஸந்யா'ரமதர்ம்மம் (ஸந்யாஸாஶ்ரம தர்ம்மம்) | ஸந்ந்யாஸா 'ரமம் (ஸந்ந்யா ஸாஶ்ரமம்) | சம்ந்யாஸம் (ஸம்ந்யாஸம்) |
| | | ஊழ் (ஊழ்) | - | - | விதி (விதி) |
| 2. | பொருட்பால் (பொருட்பால்) | அரசியல் (அரசியல்) | ராஜத்வம் (ராஜத்வம்) | ராஜதர்ம்மம் (ராஜதர்ம்மம்) | அரசதர்மம் அதவா ரா'ட்ரியம் (அரசதர்ம்மம் அதவா ராஷ்ட்ரீயம்) |
| | | அங்கவியல் (அங்ஙவியல்) | ராஜாங்கம் (ராஜாங்கம்) | ராஜாங்கம் (ராஜாங்கம்) | அங்கதர்ம்மம் (அங்ஙதர்ம்மம்) |
| | | ஒழிபியல் (ஒழிபியல்) | - | - | அந்வயதர்ம்மம் அல்லது ப்ரஜாதர்ம்மம் (அன்வயதர்ம்மம் அதவா ப்ரஜாதர்ம்மம்) |
| 3. | காமத்துப்பால் (காமத்துப்பால்) | களவியல் (களவியல்) | ரஹஸ்ஸங்கமம் (ரஹஸ்ஸங்ஙமம்) | ரஹஸ்ஸ மாகமம் (ரஹஸ்ஸ மாகமம்) | ரஹஸ்ஸமாகமம் அதவாகாந்தர்வ்வம் (ரஹஸ்ஸமாகமம் (காந்தர்வ்வம்) |
| | | கற்பியல் (கற்பியல்) | பாதிவ்ரத்யம் (பாதிவ்ரத்யம்) | பாதிவ்ரத்யமஹிம (பாதிவ்ரத்ய மஹிம) | சாரித்ர'ுத்தி (சாரித்ரஶுத்தி) |

***ISSN: 2320-4842 (Print)*** ***ISSN: 3049-2688 (Online)***

*மொழிபெயர்ப்பாளர் மூவரில் வெண்ணிகுலம் கோபால குருப்பும் ரமேஷன் நாயரும் இயல் வைப்பு முறையில் ஒத்த கருத்துடையவர்களாக இருக்கின்றனர். தமிழில் அறத்துப்பால் நான்காகப் பாகுபாடு செய்யப்பட இருவரும் அறத்துப்பாலை மூன்று இயல்களாகப் பிரிக்கின்றனர். இப்பிரிப்பு முறையை இருவரும் எங்கிருந்து பெற்றனர் என்பது தெரியவில்லை. பொருட்பாலுக்கான இவ்விருவரின் இயல் பாகுபாடு காலிங்கர் பாகுபாட்டையும் காமத்துப்பாலுக்கான இயல்பாகுபாடு பரிமேலழகர் பாகுபாட்டையும் ஒத்திருக்கிறது. ஆயினும் இயல்தலைப்பு சுட்டுவதில் சிறு வேறுபாடு இருவரிடமும் இருப்பதைக் காணமுடிகிறது. உம்*

**இல்லறம்** *எனும் சொல் மனையாளோடு கூடிவாழும் வாழ்க்கையையும் அவர்தம் கடமையையும் உணர்த்த வரும் ஒற்றைச் சொல்லாகும். இச்சொல் மலையாளத்தில் வெண்ணிகுலம் கோபால குருப்பு அவர்களால் க்ருஹஸ்தாஷ்ரம தர்ம்மம் அதாவது இல்லறத்தார் கடன் என்று மொழிபெயர்க்கப்படுகிறது. அதுவே ரமேஷன்நாயர் அவர்களால் கார்ஹஸ்த்யம் அதாவது இல்வாழ்க்கை என்று மொழிபெயர்ப்பு செய்யப்படுகிறது. ரமேஷன் நாயரின் இவ்வியல் தலைப்பையே சந்திரசேகரன் நாயரும் பயன்படுத்துகின்றார். சந்திரசேகரன் நாயரின் இயல்பாகுபாடு பரிமேலழகர் இயல்பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இயல்தலைப்பு சுட்டுவதில் இருவித சொற்களைப் பயன்படுத்துகிறார். உம்*

*பொருட்பாலில் வரும் அரசியலை இவர்* **அரசதர்மம் அதவா ராஷ்ட்ரியம்** *(அரசதருமம் அல்லது அரசியல்) என்றும்* **ஒழிபியலை அந்வயதர்ம்மம்** *அல்லது ப்ரஜாதர்ம்மம் (பிற தருமம் அல்லது இறை தருமம்) என்றும் காமத்துப்பாலில் உள்ள களவியலை* **ரஹஸ்ஸமாகமம் அதவா காந்தர்வ்வம்** *என்றும் மொழிபெயர்க்கிறார். இவர்களின் மொழிபெயர்ப்பில் தமிழ், சம்ஸ்க்ருதம் கலந்த மலையாளச் சொற்களைக் காணமுடிகிறது.*

## அதிகாரப்பெயர்களும் மொழிபெயர்ப்பும்

*மொழிபெயர்ப்பாளர் மூவரும் திருக்குறளின் 133 அதிகாரங்களையும் மலையாள மொழியில் மொழிபெயர்த்துள்ளனர். அவை அறத்துப்பால் - 38, பொருட்பால் - 70, காமத்துப்பால் - 25 என்பனவாகும். மூவர் மொழிபெயர்ப்பும் இங்குப் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன.*

| வ. எண் | தமிழ் | | மலையாளம் | | |
|---|---|---|---|---|---|
| | இயல் | அதிகாரம் | வெண்ணிகுலம் கோபால குருப்பு | எஸ். ரமே‘ன் நாயர் | கெ.ஜி. சந்திரசேகரன் நாயர் |
| | 1 | கடவுள் வாழ்த்து | *ஈஸ்வரஸ்துதி* | தைவஸ்துதி | தைவஸ்துதி |
| | 2 பாயிரம் | வான்சிறப்பு | *வ்ருஷ்டி மாஷாத்ம்யம்* | *வர்ஷப்ரஷ்ஸ்தி* | **வான்**மகிம அதவா மாரி மஹத்வம் |
| | 3 (പായിരം) | நீத்தார் பெருமை | சந்ந்யாசி மாஹாத்ம்யம் | ஸச்ந்யாஸமஹிம | யோகீமாஹாத்ம்யம் |
| | 4 | அறன்வலி யுறுத்தல் | தர்ம்மதார்ட்யம் | தர்ம்ம மாஹாத்ம்யம் | தர்ம்மோத்தானம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | | இல்வாழ்க்கை | க்ருஹஸதாஷ்ரம ஜீவிதம் | கருஹஸ் தாஷ்ரமம் | கார்ஹிகஜீவிதம் |
| 6 | | வாழ்க்கைத் துணைநலம் | க்ருஹிணீத்வம் | குலபத்னீதர்ம்மம் | ஸஹதர்ம்மிணீ சாயுஜ்யம் |
| 7 | | மக்கள்பேறு | புத்ரலாபம் | ஸத்புத்ரலாபம் | சந்தானபாக்யம் (சந்தானலப்தி) |
| 8 | | அன்புடைமை | ஸ்நேகம் | ஜீவஸ்நேஹம் | ஸ்நேஹசீலம் |
| 9 | **இல்லறம்** (ஐல்லறம்) | விருந்தோம்பல் | அதிதிசல்காரம் | அதிதிபூஜ | **விருந்து**பசாரம் |
| 10 | | இனியவை கூறல் | மதுரபாஷணம் | மயுரபாஷணம் | மயூரபாஷணம் (சுபாஷிதம்) |
| 11 | | செய்ந்நன்றியறிதல் | உபகாரஸ்மரண | உபகாரஸ்மரண | க்ருதஜ்ஞுதாபோதம் அதவா உபகாரஸ்மரண |
| 12 | | நடுவு நிலைமை | மத்யஸ்தத | நிஷபக்ஷத | மத்யஸ்தத அதவா நிஷபக்ஷத |
| 13 | | அடக்கமுடைமை | தமநம் | ஸம்யமனம் | துிதிக்ஷ அதவா சம்யமனம் |
| 14 | | ஒழுக்கமுடைமை | ஆசாரம் | ஸதாசாரம் | குணமேன்ம அதவா சதாசாரம் |
| 15 | | பிறனில் விழையாமை | பரதாரமோஹ ராஹித்யம் | பரதாராஸ க்தி இல்லாய்ம | பரதார சங்கம விலக்கு |
| 16 | | பொறையுடைமை | க்ஷம | க்ஷம | க்ஷாந்தி அதவா க்ஷம ஸ ஹஷணுத) |
| 17 | | அழுக்காறாமை | அசூயாமாஹித்யம் | அசூயா ராஹித்யம் | அசூய இல்லாய் அதவா அனுசூய |
| 18 | | வெ.்.காமை | ஆ்ராஹித்யம் | லோபராஹித்யம் | துர்மோஹ மில்லாய்ம (அபஹாரசிந்த இல்லாய்ம) |
| 19 | | புறங்கூறாமை | பரோக்ஷதூஷண ராஹித்யம் | பரதூஷணம் பரயாய்க | பரதூஷணம் உரய்க்காய்ம (வைஷன்யம் சொல்லாய்ம) |
| 20 | | பயனில சொல்லாமை | வ்யத்தபாஷண ராஹித்யம் | வீண்வாக்கு சொல்லாய்க | **வீண் வாக்கு**ரய்க்காய்க |
| 21 | | தீவினையச்சம் | பாபதீதி | பாவகர்ம்மபதம் | துஷ்கர்ம்ம பயம் |
| 22 | | ஒப்புரவறிதல் | உபகாரபோதம் | அறிஞ்ஞு உபகரிக்கல் | ஜனபதபோதம் அதவா லௌகிக வ்யவஹாரம் |
| 23 | | ஈகை | தானம் | தானம் | தானம் |
| 24 | | புகழ் | கீர்த்தி | கீர்த்தி | கீர்த்தி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 | துறவறம் (துறவறம்) | அருளுடைமை | கருண | காருண்யம் | ஜீவகாருண்யம் |
| 26 | | புலால் மறுத்தல் | மாம்ஸபோஜன விரோதம் | மாம்ஸ வர்ஜ்ஜனம் | மாம்ஸவர்ஜனம் |
| 27 | | தவம் | தபஸ்ஸு | தபஸ்ஸு | தபஸ்ஸு |
| 28 | | கூடா ஒழுக்கம் | நிஷித்தாசாரம் | அநாசாரம் | அநாசாரம் |
| 29 | | கள்ளாமை | நிர்வ்யாஜத | களவுசெய்யாய்க | கள்ளமில்லாய்க |
| 30 | | வாய்மை | சத்யநிஷ்ட | ஸத்யஸந்தத | ஸத்யநிஷ்ட |
| 31 | | வெகுளாமை | அக்ரோதம் | கோபிக்காய்க | க்ரோதம் இல்லாய்ம (அக்ரோதம்) |
| 32 | | இன்னா செய்யாமை | த்ரோஹராஹித்யம் | த்ரோஹம் செய்யாய்க | பரபீடனம் அதவா பரத்ரோஹம் செய்யாய்க |
| 33 | | கொல்லாமை | அஹிம்ச | அஹிம்ச | ஹிம்ஸயில்லாய்ம (அஹிம்ச) |
| 34 | | நிலையாமை | அஸ்திரத | ஜ்ஞானம் | ஸ்திரதயில்லாய்ம (அஸ்திரத, அஜ்ஞானம் அதவா மித்யாபோதம்) |
| 35 | | துறவு | த்யாகம் | த்யஜிக்கல் | பரித்யஜனம் அதவா பரிவ்ர ஜ்யனம் (ஜ்ஞானநிஷ்டம்) |
| 36 | | மெய் உணர்தல் | தத்வபோதம் | தத்வஜ்ஞானம் | ஆத்மஜ்ஞானம் அதவா ப்ரப்ம ஸா'த்காரம் |
| 37 | | அவா அறுத்தல் | ஆஷாநாஷம் | ஆஷயொழிக்கல் | மோஹஹதம் அதவா கர்ம்ம வாஸனாஹரணம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 38 | **ஊழ்** (ஊழ்) | ஊழ் | விதி | விதி | விதி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 39 | | இறைமாட்சி | ராஜமஹிம | ராஜமஹத்த்வம் | ராஜப்ரஷஸ்தி |
| 40 | | கல்வி | வித்ய | வித்ய | வித்ய |
| 41 | | கல்லாமை | வித்யாவிஹீநத | நிரக்ஷரத | நிரக்ஷரத (வித்யயில்லாய்ம) |
| 42 | | கேள்வி | ஷ்ரவணம் | ஷ்ரவணம் | கேள்விஜ்ஞானம் |
| 43 | | அறிவுடைமை | அறிவ் | அறிவ் | அறிவ் |
| 44 | | குற்றங்கடிதல் | தோஷவர்ஜனம் | தோஷவர்ஜ்ஜனம் | குற்றவர்ஜ்ஜனம் |
| 45 | | பெரியாரைத் துணைக்கோடல் | மஹத்ஸாஹாய்ய ஸித்தி | மகத்துக்களெ துணயாக்கல் | குருஜன ஆதானம் |
| 46 | | சிற்றினம் சேராமை | துர்ஜனஸம்ஸர்க்க வர்ஜனம் | நிஸ்ஸாரன் மாருமாயி சேராய்க | துர்வ்யத்தம் சேராய்க |
| 47 | அரசியல் (அரசியல்) | தெரிந்து செயல்வகை | கர்த்தவ்யகர்மம் | கர்ம்மகௌ'லம் | கர்ம்ம போதம் |
| 48 | | வலி அறிதல் | ஷக்திபோதம் | ஷக்தி அறியல் | பலநிரீக்ஷணம் |
| 49 | | காலம் அறிதல் | காலஜ்ஞானம் | காலஜ்ஞானம் | காலபோதம் |
| 50 | | இடன் அறிதல் | ஸ்தலஜ்ஞானம் | ஸ்தலஜ்ஞானம் | ஸ்தலபோதம் |
| 51 | | தெறிந்து தெளிதல் | திரஞ்ஞெடுக்கல் | திரஞ்ஞெடுக்கல் | விஷ்வாஸபோதம் |
| 52 | | தெரிந்து வினையாடல் | க்ருத்யபோதம் | கர்த்தவ்யபோதம் | கர்ம்ம பத்தஜ்ஞானம் |
| 53 | | சுற்றந்தழால் | பந்துஜனாதரணம் | பந்துஜன ப்ரவீணனம் | பந்து ஸபர்க்கம் |
| 54 | | பொச்சாவாமை | அவிஸ்ம்ருதி | மறவி இல்லாய்ம | ஜாக்ரத (மறவி தோஷமில்லாய்ம) |
| 55 | | செங்கோன்மை | ஸத்பரணம் | ஸத்பரணம் | தண்டநீதி (செங்கோல்) |
| 56 | | கொடுங்கோன்மை | துர்ப்பரணம் | துர்ப்பரணம் | உக்ர'ாஸனம் (கொடுங்கோல்) |
| 57 | | வெருவந்த செய்யாமை | கடினதண்ட ராஹித்யம் | க்ரூரதண்டம் செய்யாய்க | தண்டபாருஷ்யம் இல்லாய்ம |
| 58 | | கண்ணோட்டம் | தாீண்யம் | தாீண்யம் | தாீண்யம் (தயாசித்தம் அதவா கடா'ம்) |
| 59 | | ஒற்றாடல் | சாரஸ்வீகரணம் | சாரனியோகம் | சாரவ்யத்தி |
| 60 | | ஊக்கமுடைமை | மனஷ்ஷக்தி | மனோதைர்யம் | தைர்யம் |
| 61 | | மடியின்மை | நிஸ்தந்ரத | ஆலஸ்யம் இல்லாய்ம | மடியில்லாய்ம |
| 62 | | ஆள்வினை உடைமை | உத்ஸாஹம் | பரி'ரமீலம் | மனுஷ்ய ப்ரயத்தனம் |
| 63 | | இடுக்கண் அழியாமை | மனோநி'சலத | துக்கத்தில் மனம் தளராய்க | துக்கபாரம் அகலாய்ம |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 64 | | அமைச்சு | மந்த்ரித்வம் | ஸசிவத்வம் | அமாத்யன் |
| 65 | | சொல்வன்மை | வாக்விலாஸம் | வாக்வைபவம் | வாக்வைபவம் (வாக்சாதுர்யம்) |
| 66 | | வினைத்தூய்மை | கர்ம்மஷு¬த்தி | கர்ம்மஷு¬த்தி | கர்ம்மஷு¬த்தி |
| 67 | | வினைத்திட்பம் | கர்ம்மஷுக்தி | கர்ம்மதார்ட்யம் | கர்ம்மதார்ட்யம் |
| 68 | | வினைசெயல்வகை | ப்ரவ்ருத்திஸ்திர த | நிர்வ்வஹுண ஸாமர்த்தியம் | கர்ம்ம ப்ரவர்த்தனஷைலி |
| 69 | | தூது | தௌத்யம் | தூத் | தூத் |
| 70 | | மன்னரைச் சேர்ந்தொழுகல் | ராஜசேவ | ராஜசேவ | ராஜசேவ |
| 71 | | குறிப்பறிதல் | இங்கிதஜ்ஞானம் | இங்கிதஜ்ஞானம் | லக்ஷுணஜ்ஞானம் |
| 72 | | அவை அறிதல் | சபாஜ்ஞானம் | சபாஜ்ஞானம் | ஸபாபோதம் |
| 73 | | அவை அஞ்சாமை | ஸபாகபரா ஹித்யம் | சபாகபம் இல்லாய்க | சபாகபம் இல்லாய்ம |
| 74 | | நாடு | ரா்'ட்ரம் | நாட் | ராஜ்யம் |
| 75 | **அங்கவியல்** | அரண் | கோட்ட | கோட்ட | துர்க்கம் |
| 76 | (அஙஂகவியலஂ) | பொருள் செயல்வகை | தனார்ஜனம் | தனஸபாதனம் | ப்ராயோகிக ஸபத்கடன |
| 77 | | படைமாட்சி | சைன்யகுணம் | சைன்யப்ரஷுஸ்தி | சைன்ய மஹிம |
| 78 | | படைச்செருக்கு | வீரகதனம் | யுத்தவீரயம் | ஸமரவீரயம் (சைன்யஷுக்தி) |
| 79 | | நட்பு | ஸ்நேஹபாவம் | ஸக்யம் | மைத்ரி |
| 80 | | நட்பாராய்தல் | ஸ்நேஹபரீக்ஷு ண ம் | ஸக்யபரீக்ஷுணம் | மைத்ரீ பேதம் |
| 81 | | பழைமை | பழக்கம் | பழக்கம் | ஸபர்க்கப்பழம |
| 82 | | தீ நட்பு | துக்ஹஸ்நேஹம் | துஷுட ஸம்ஸர்க்கம் | துஷுடமைத்ரி |
| 83 | | கூடா நட்பு | அயூக்தஸ்நேகம் | நிஷித்த ஸ்நேஹம் | அனர்ஹ மைத்ரி |
| 84 | | பேதைமை | மடயத்தரம் | மௌட்யம் | மௌட்யம் (மூடத) |
| 85 | | புல்லறிவாண்மை | அஜ்ஞத | அல்பஜ்ஞத | அல்பஜ்ஞான அஹங்காரம் |
| 86 | | இகல் | க்ரோதம் | க்ரோதம் | ஈர்ஷ்ய (அவஜ்ஞ) |
| 87 | | பகைமாட்சி | ஷுத்ருத்வம் | ஷுத்ருத | ஷுத்ருதா மஹத்த்வம் |
| 88 | | பகைத்திறம் தெறிதல் | ஷுத்ருபலஜ் ஞானம் | ஷுத்ருபலம் அறியல் | ஷுத்ருபலபோதம் |
| 89 | | உட்பகை | உள்ப்பக | உள்ப்பக | அந்தச்சித்ரம் (உள்ப்பக) |
| 90 | | பெரியாரைப் பிழையாமை | வலியவரெ நிந்திக்காய்த | மகத்துக்களெ நிந்திக்காய்க | குரு நிந்த செய்யாய்ம |
| 91 | | பெண்வழிச் சேறல் | ஸ்த்ரீதாஸ்யம் | ஸ்த்ரீஜிதத்வம் | காகரூகம் (நாரீதாஸ்யம்) |
| 92 | | வரைவின் மகளிர் | வாரனாரி | வேஷ்யகள் | வேஷ்யகள் |
| 93 | | கள்ளுண்ணாமை | மத்யவர்ஜனம் | மத்யவர்ஜ்ஜனம் | மத்யவர்ஜ்ஜனம் |
| 94 | | சூது | சூத் | சூத் | சூதாட்டம் |
| 95 | | மருந்து | ஔஷுதம் | மருந்நு | ஔஷுதம் (ரோஹ நிவாரணி) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 96 | | குடிமை | கலினத | குலீனத | குலமஹிம |
| 97 | | **மானம்** | **மானம்** | **மானம்** | **மானம்** |
| 98 | | பெருமை | ஔல்க்ருஷ்ட்யம் | மஹத்த்வம் | மஹத்த்வம் |
| 99 | | சான்றாண்மை | ஸத்குணம் | ஸத்குணங்கள் | மஹாமனஸ்கத (உதாரத) |
| 100 | | பண்படைமை | குணபாவம் | ஸம்ஸ்காரம் | ஸம்ஸ்காரம் |
| 101 | **ஒழிபியல்** (ஒழிபியல்) | நன்றியில் செல்வம் | நிஷ்பலைஷ்வர்யம் | விபலஸம்பத்த் | குப்தஸபத்த (அபஹன்வ ஸபத்த்) |
| 102 | | நாணுடைமை | **நாணம்** | **நாணம்** | லஜ்ஜ (நாணம்) |
| 103 | | குடிசெயல்வகை | குலோத்தரணம் | குலஸ முத்தரணம் | குடும்பபே'ம ப்ரவர்த்தனை'லி |
| 104 | | உழவு | க்ருஷி | க்ருஷி | கலப்பபூட்ட (உழவ்) |
| 105 | | நல்குரவு | தாரித்ரயம் | தாரித்ரயம் | தாரித்ர்யம் (இல்லாய்ம) |
| 106 | | இரவு | யாசன | யாசன | பி'ாடனம் (யாசன) |
| 107 | | இரவச்சம் | யாசனாபிமானம் | யாசனாபதம் | யாசனாதூஷ்யம் (பிக்ஷாடன ஸங்கோசம்) |
| 108 | | கயமை | சண்டாளத்வம் | நீசத்வம் | ந்யஷம்ஸத (க்ரௌர்யம்) |
| 109 | | தகை அணங்கு உறுத்தல் | நாயகானுமானம் | நாயகானுமானம் | காமினீ நொபரம் |
| 110 | **களவியல்** (களவியல்) | குறிப்பறிதல் | இங்கிதஜ்ஞாத | இங்கிதஜ்ஞானம் | சக்க்ஷுப்ரீதிக்ராஹ் யம் |
| 111 | | புணர்ச்சி மகிழ்தல் | ஸுரதாபிநந்தனம் | ஸம் யோகானந்தம் | விஷயாஹ்ளாதம் (ஸம்யோக ஸுகம்) |
| 112 | | நலம் புனைந்து உரைத்தல் | நாயிகா வைஷிஷ்ட்யம் | நாயிகாப்ர'ம்ஸ | தன்ம ப்ரகீர்த்திக்குன்ன பங்கிவாக்குகள் |
| 113 | | காதற் சிறப்புரைத்தல் | காமமாஹாத்ம்யம் | ப்ரேமமாஹாத்ம் ய ப்ரஸ்தாவம் | ப்ரணய மஹத்த்வ ப்ரஷம்ஸா மொழிகள் |
| 114 | | நாணுத்துறவுரைத் தல் | லஜ்ஜாத்யாகம் | லஜ்ஜாத்யாகம் அறியிக்கல் | லஜ்ஜா வர்ஜ் ஜிதமொழிகள் |
| 115 | | அலர் அறிவுறுத்தல் | லோகாபவாதம் | லோகாபவாதம் உணர்த்தல் | அபவாத போதப்ரசோதனம் |

***ISSN: 2320-4842 (Print)*** ***ISSN: 3049-2688 (Online)***

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 116 | | பிரிவாற்றாமை | விரகதாபம் | விரஹஸந்தாபம் | வியோக வஷாதம் (விரஹதுக்கம்) |
| 117 | | படர்மெலிந்திரங்கல் | காமதாபஷோஷம் | காமதாபத்தால் மெலியல் | விரஹதுக் கவிலாபம் |
| 118 | | கண் விதுப்பழிதல் | நேத்ரகாந்திக்ஷயம் | நயனகாந்தி மங்ஙல் | நயனவிலாபம் (அஷ்ருதாரா துக்கம்) |
| 119 | | பசப்புறு பருவரல் | வைவர்ண்ணயம் | விரஹ வைவர்ண்ண்யம் | விளர்ச்சாவிஷாதம் (ஷரீரகார்ஷ்யம்) |
| 120 | **கற்பியல்** (கற்ப்பியல்) | தனிப்படர் மிகுதி | விரஹபாரவஷ்யம் | நாயிகயுடெ வியோகதுக்கம் | ஸ்வபக்ஷ கதனபாரம் |
| 121 | | நினைந்தவர் புலம்பல் | அனுஸ்மரண ப்ரலாபம் | அனுஸ்மரண ப்ரலாபம் | க்லேஷசிந்தா புலம்பல் |
| 122 | | கனவு நிலை உரைத்தல் | ஸ்வப்ன வ்ருத்தாந்தம் | ஸ்வப்ன வ்யத்தாந்த கதனம் | ஸ்வப்னஸ்திதி விவரணம் |
| 123 | | பொழுது கண்டு இரங்கல் | ஸந்த்யாலோக ஸந்தாபம் | ஸந்த்யாதரஷன விஷாதம் | ஸந்த்யா விஷாதம் (ஸந்த்யா துக்கம்) |
| 124 | | உறுப்பு நலன் அழிதல் | அங்கஸௌந்தர்ய லோபம் | அங்க காந்தக்ஷயம் | அங்ககாந்தி'யம் (மேனிலாவண்ய க்ஷயம்) |
| 125 | | நெஞ்சொடு கிளத்தல் | ஹ்ருதயோத் போதனம் | ஹ்ருதய ஸம்வாதம் | ஹ்ருதயக்கலம்பல் |
| 126 | | நிறை அழிதல் | ஸ்தைர்யக்ஷயம் | வாக்ப்ரம்ஷம் | லஜ்ஜாபங்கம் (அடக்கம் வெடியல்) |
| 127 | | அவர்வயின் விதும்பல் | பர்த்த்ருஸாந் நித்யகாங்க்ஷ | ஸமாகமோத் கண்ம் | ஸங்க மோத் கண்டயாலுள்ள கரச்சில் |
| 128 | | குறிப்பறிவுறுத்தல் | சேஷ்டானுமானம் | தாத்பர்யம் அறியிக்கல் | ப்ரதீகஜ்ஞானம் (சூச்யஜ்ஞானம்) |
| 129 | | புணர்ச்சி விதும்பல் | ரதிகாங்க்ஷ | ஸங்கமேச்ச | புணர்ச்சி மோஹம் (ஸங்கமேச்ச) |
| 130 | | செஞ்சொடு புலத்தல் | மனஸ்ஸினோடு கலஹம் | ஹ்ருதயத்தோடு பிணங்ஙல் | ஹ்ருதயப் புலம்பல் |
| 131 | | புலவி | பிணக்கம் | பிணக்கம் | ராகபரிபவம் |
| 132 | | புலவி நுணக்கம் | லகுகாரணகலஹம் | கலஹநிமித்தம் | ராகபரிபவ சூச்யம் |
| 133 | | ஊடல் உவகை | கலஹப்ரஷஸ்தி | பரிபவமாயுர்யம் | ராககலஹமாயுரி |

*இப்பட்டியலினை உற்று நோக்கினால் மூவர் பனுவலில் உள்ள அதிகாரங்கள் மலையாளமொழியில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும் அவர்களின் மொழிபெயர்ப்பில் மலையாளம் மட்டுமன்றி தமிழும் அதிகளவு சம்ஸ்க்ருதமும் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.*

*மூவரில் வெண்ணிகுலம் கோபால குருப்பு மற்றும் ரமேஷன் நாயரின் மொழிபெயர்ப்பில் மலையாளத்துடன் சம்ஸ்க்ருதச் சொற்கள் அதிகளவும் சந்திரசேகரன் நாயரின் மொழிபெயர்ப்பில் மலையாளத்துடன் அதிகளவு சம்ஸ்க்ருதச்*

சொற்களையும் சிறுபான்மை தமிழையும் காணமுடிகிறது. பட்டியலில் தமிழ்ச் சொற்கள் அடையாளப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன. மேலும் இவர் மூலநூலில் உள்ள அதிகாரப் பெயர்களுக்குத் தொடர்புடைய முதன்மைப் பெயர் வழங்கியிருப்பதோடு மட்டுமல்லாமல் சில அதிகாரங்களுக்கு ஒன்றுக்குமேற்பட்ட பெயர்களை வினா எழுப்பி அதன் மூலம் விளக்கம்பெற்றுத் தெளிவாக்கியிருப்பதும் சிறப்புக்குரியதாகும். ஒவ்வொரு அதிகாரத்திற்கும் அதற்குரிய விளக்கமும் அதிகார வைப்புமுறைக்கான காரணமும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

வெண்ணிகுலம் கோபால குருப்பு மற்றும் ரமேஷன் நாயரின் மொழிபெயர்ப்பு சுருக்கமான உரையுடன் இருக்க, சந்திரசேகரன் நாயரின்மொழிபெயர்ப்பு கற்போர்க்கு எளிதாக விரிவான விளக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

**குறள் அமைப்பும் பொருள்விளக்கமும்**

**வெண்ணிகுலம் கோபால குருப்பு**

இவர்தம் பனுவலில் அதிகாரத் தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்குரிய விளக்கம் இல்லை. தலைப்பைத் தொடர்ந்து மூலக்குறளின் மலையாள மொழிபெயர்ப்பு அமைகின்றது. வருமாறு,

> **ஆகெயெழுத்துகள்க்காதி யகாரம்தான்**
>
> **லோகத்தின் ஆதி பகவான்** *(குறள்.1 பக்.33, 1983)*

இதன் மூலக்குறள்

> **அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
>
> **பகவன் முதற்றே உலகு**

என்பதாகும். இவர் மூலக்குறளில் இடம்பெறும் எழுத்தெல்லாம் என்பதற்கு மொத்த எழுத்துகள் அல்லது நெடுங்கணக்கு எனும் பொருள் பொதிந்த ஆகெயெழுத்துகள் என்றும் ஆதியினை உலகத்துடன் இணைத்து உலகத்தின் முதல் பகவான் என்றும் மொழிபெயர்க்கிறார். மேலும் விளக்கம் தரும் பகுதியில் கவிஞருடைய தாயின் பெயர் ஆதி என்றும் தந்தையின் பெயர் பகவன் என்றும் இருந்ததாகவும் அதனால்தான் திருவள்ளுவர் இப்படி கவிதையினைத் துவங்கியுள்ளார் என்று குறிப்பிடுகிறார். இவர் தரும் இவ்விளக்கத்தை மற்றவர்கள் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் குறளுக்கு மிகச் சுருக்கமாகவே விளக்கம் அளித்துச் செல்கிறார்

**ரமேஷன் நாயர் - குறள் அமைப்பும் பொருள் விளக்கமும்**

இவர் தம் பனுவலில் முதலில் தமிழ் மூலக்குறளின் ஒலிபெயர்ப்பையும் அடுத்து மலையாள மொழிபெயர்ப்பையும் தருகிறார். உ.ம்

*தமிழ் :* **அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு** *(குறள்.1 பக்.39, 2014)*
അകര മുതല എഴുത്തെല്ലാം ആതി
പകവൻ മുതറ്റേ ഉലകു.

*மலையாளம் :* **அகரம் முதல் எழுத்தெல்லாம் ஆதி**
**பகவான் முதல்க்கே உலகம்** *(குறள்.1 பக்.39, 2014)*

*தமிழ் :* **கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்**

കറ്റതനാലായ പയൻഎങ്കൊൽ വാലറിവൻ
നറ്റാൾ തൊഴാഅർ എനിൻ

*மலையாளம் :* *வித்யயால் பலமெந்து? சர்வ்வஜ்ஞனாயோன்றெ*
*த்ருப்பாதம் கும்பிட்டிடாய் கில்* (குறள்.2 பக்.40, 2014)

*தமிழ் :* *மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார்*

: മലർമിചൈ ഏകിനാൻ മാണടി ചേർന്താർ
നിലമിചൈ നീടുവാഴ് വാർ

*மலையாளம் :* *மலரில் வாழுன்னோன்றெ சேவடி சேர்ந்நவர்*
*நிலமதில் வாணிடும் நீணாள்.* (குறள்.3 பக்.40, 2014)

*மூலக்குறளின் ஒலிபெயர்ப்பையும் மலையாள மொழிபெயர்ப்பையும் தரும் மொழிபெயர்ப்பாளர் சொற்பொருள் தரும் பகுதியில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட குறளின் சொல்லைக் கொண்டு பொருள் உணர்த்தாமல் மூலக்குறளின் சொல் கொண்டே குறளுக்குச் சொற்பொருள் காட்டுகிறார். உம்*

*அகர - அகாரம், முதல – முதல், எழுத்தெல்லாம் - அக்ஷரங்கள் எல்லாம் (அது போல), ஆதி – ஆதியாயிருக்குன்ன (முதலாக இருக்கிற), பகவன் - பகவான், முதற்றே – முதல்க்காண், உலகு – லோகம்.*

*இப்படி சொல்பிரித்து வழங்கப்பட்ட பொருள் தொகுத்தும் எழுதிக் காட்டப்படுவதுடன் தேவைப்படும் சில இடங்களில் மொழிபெயர்ப்பாளர் விளக்கமும் கொடுத்துள்ளார்.*

*கற்றதனாலாய பயனென்கொல் எனும் 2ஆம்குறளின் விளக்கத்தில் மொழிபெயர்ப்பாளர் காய்கள் அதிகம் காய்க்கும்தோறும் மரம் தலைகுனிவது போல எத்துணை கல்வி கற்றாலும் முடியுமோ அத்துணை பணிவும் உண்டாக்கும் என்று பணிதலுக்கான உவமை கூறிச் செல்கிறார்.*

***ஜி. சந்திரசேகரன் நாயர்***

*ரமேசன் நாயர் போன்று மூலக்குறளின் மலையாள ஒலிப்பெயர்ப்பினை இவர் தருகிறார். சொற்களை மாற்றியமைக்காமல் மூலக்குறளின் வடிவத்திலேயே பொருள் தருவதோடு தமிழில் உரையாசிரியர் சொற்களைக் கொண்டுகூட்டிப் பொருள்கொள்வது போல பொருளறியும் வகையில் பொருத்தமாகச் சில குறள்களின் சொற்களை மாற்றிச் சேர்த்து பொருள் அமைத்துள்ள முறை நன்று. இவர் 1330 குறளையும் சொல்மாற்றிப் பொருள் கொள்ளவில்லை. அறத்துப்பாலின் 380 குறிளில் 189 குறளையும் பொருட்பாலின் 700 குறளில் 387 குறளையும் காமத்துப்பாலின் 250 குறளில் 183 குறளையும் சொல்மாற்றிச் சேர்த்துப் பொருள் கண்டிருக்கிறார். மற்றவற்றை மூலக்குறளின் வடிவத்தில் உள்ளபடியே கொண்டு பொருள் கொள்கிறார். மேலும் பொருட்பாலின் 75ஆவது அதிகாரத்தில் இடம்பெறும் 10 குறளும் மாற்றமில்லாமல் பொருள்கொள்ளப்பட்டிருக்கிறது. அதுபோலவே 93, 120, 124, 130 ஆகிய நான்கு அதிகாரங்களில் இடம்பெறும் குறட்பாக்கள் அனைத்தும் சொல்மாற்றிச் சேர்த்து பொருள் கொள்ளப் பட்டிருக்கின்றன.*

*759 குறள்களையும் இவர் சொல்மாற்றிச் சேர்த்துப் பொருள் கண்டிருக்கிறாரே அன்றி பொருள் அமைத்துள்ள முறையில் பிரிக்கப்பட்ட சொற்களை இணைத்துக்*

*குறள்வடிவில் எழுதிக்காட்டவில்லை. ஆயினும் இங்குப் புரிதல் நோக்கில் முதல் அதிகாரத்தில் மொழிபெயர்ப்பாளர் சொற்கள் மாற்றி அமைத்துப் பொருள்கண்ட குறள் மட்டும் எடுத்துக் காட்டப்படுகிறது. உ.ம்*

**தமிழ்** **கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழார் எனின்.**

*எனும் குறளினை*

**மலையாளம்** **வாலறிவன் தாள் தொழார் எனின்**
**கற்றதனால் ஆயபயன் என்கொல்** *(குறள்.2 பக்.44, 2013)*

*என்றும்*

**தமிழ்** **இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு**

*எனும் குறளினை*

**மலையாளம்** **இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு**
**இருள்சேர் இருவினையும் சேரா** *(குறள்.5 பக்.47, 2013)*

*என்றும் மாற்றிப் பொருள்கொள்கிறார். இப்படி சொற்களை மாற்றி பொருள் காட்டியிருக்கும் இம்முறையிலேயே பனுவலில் உரை அமைகின்றது. சொற்பொருளும் வாக்கியப்பொருளும்; அளித்து சொற்றொடரில் அமைந்த உட்பொருளை உரையாக்கி இணைத்து எழுதியிருக்கிற முறை சிறப்பாக உள்ளது. அது மட்டுமல்லாமல் சில குறள்களுக்கு ஆய்வுரை வழங்கி இருப்பதும் சிறப்புக்குரியதாகும்.*

*இவருடைய விளக்கவுரைகளில் சொல்நயமும் பொருள்நயமும் நிறைந்து காணப்படுகின்றன. குறளின் உட்பொருளுக்கு ஆதாரமாய் வலிவு சேர்க்கும் வகையில் தொடர்புடைய கருத்துக்கள் பிற இலக்கிய மற்றும் சாத்திர நூல்களிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளதுடன் பிறமொழி அறிஞர்களின் கருத்துக்களையும் தன் உரைக்கு வலிவுசேர்க்கும் விதத்தில் அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. உ.ம்*

**அகரமுதல எழுத்தெல்லாம்** *என்று தொடங்கும் முதல் குறளில் வரும் எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாகக் கொண்டிருப்பது போல இவ்வுலகம், இறைவனை முதலாகக் கொண்டு இயங்குகின்றது என்பதை விளக்க நானார்த்தரத்னமாலையில் இருந்தும் கீதையிலிருந்தும் மேற்கோள் காட்டுகிறார்.*

**கற்றதனால் ஆய பயனென்கொல்** *எனும் இரண்டாம் குறளில் வரும்* **வாலறிவன்** *என்பதற்கு* **எல்லாம் அறிந்தவனும் உண்மை வடிவினனுமான ஈஷ்வரன் என்று பொருள் கொண்டு அச்சிறப்புடைய ஈஷ்வரனை வணங்காதவன் எத்தகைய சாத்திரங்களைப் படித்திருந்தாலும் பயனில்லை** *என்பதை விளக்க திருநாவுக்கரசரின்*

**வேதம் ஓதில் என் வேள்விகள் செய்கில் என்**

………………………………………………….

**ஈஷ்வரனை உள்ளுவோர்க்கன்றி இல்லையே**

*என்ற பாடலையும் இக்கருத்தை உடைய இஸ்லாமியர்களின் மறைநூலாகிய குர்ஆனின் வசனத்தையும் (ஜுமுஆ. 62 – 5) மேற்கோள் காட்டுகிறார். (பக்.45)*

*தேவையான இடங்களில் குறளின் பொருள் உணர்த்தும் முறையில் பல்வேறு அறிஞர்களின் கருத்துக்கள் மற்றும் தத்துவ நூல்களிலிருந்தும் உதாரணம் காட்டி*

எழுதுகின்றார். அவ்வகையில் இவர் எடுத்தாண்டுள்ள நூல்களுள் சில வருமாறு,

நானார்த்த ரத்னமாலை, பகவத்கீதை, திருநாவுக்கரசர் பாடல், திருக்குர்ஆன், தபோவனாஷ்டகம், சிந்தாரத்னம், அருணகிரிநாதர், இராமாயணம், மகாபாரதம், பாஷா கருணாமிர்தம், மனுதர்ம சாத்திரம், அர்த்த சாஸ்திரம், பாகவதம், நாலடியார், நீதிசாரம், பரிமேலழகர் உரை, ஜகத்குரு வசனங்கள், ஆசான் வரிகள், விவேகசிந்தாமணி, ஞாப்பான, பாரதி கவிதை, அரிநாமக் கீர்த்தனை, கண்ணதாசன் பாடல், திருமூலர் திருமந்திரம்), ஷேக்ஸ்பியர் நூல் ஆகியனவாகும்.

மூலக்குறளில் அளபெடைச்சொற்கள் 96 இடங்களில் வருகின்றன. சந்திரசேகரன் நாயர் அவர்கள் மூலக்குறளை ஒலிபெயர்ப்புச் செய்யும்பொழுது அளபெடைச் சொற்களைப் பெரும்பாலும் விடுத்தே ஒலிபெயர்க்கிறார். (இதுவும் பாடபேதம்தான்) சில இடங்களில் அளபெடையாக வரும் சொற்களை வேறுபாடமாகவும் கொள்கிறார். உ.ம்

**அளைஇப்** (குறள்10:1) எனும் சொல் **அளஇ** எனவும் **ஓஒதல்** (குறள்66:3) எனும் சொல் **ஓஒதல்** எனவும் **பெய்திரீஇ** (குறள்66:10) என்பது **பெய்தரீ** என்றும் அசைஇ (குறள்104:10) என்பது அசையி என்றும் **ஓஒ** (குறள்118:6) என்பது ஓஒ என்றும் **உரன்நசைஇ, வரன்நசைஇ** (குறள்127:3) என்பது **உரன்நசையி, வரன்நசையி** என்றும் மாற்றப்பட்டுள்ளன.

அளபெடையை அளபெடையாக ஏற்கும் இடங்களும் ஏற்காது வரும் இடங்களும் வேறுபாடமாக வருபவையும் இங்குப் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன. உதாரத்திற்குச் சில மட்டும்

| வ.எண் | பரிமேலழகர் குறள் அளபெடை, வரும் இடம் | கெ. ஜி. சந்திரசேகரன் நாயர் ஒலிபெயர்ப்பு அளபெடை |
|---|---|---|
| 1 | தொழாஅர் (குறள் 1: 2) | தொழார் |
| 2 | தூஉம் (குறள்2: 2) | தூம் |
| 3 | உழாஅர் (குறள்2:4) | உழார் |
| 4 | கெடுப்பதூஉம்,எடுப்பதூஉம் (குறள்2:5) | கெடுப்பதூம்,எடுப்பதூம் |
| 5 | அறத்தினூஉங்கு (குறள்4: 1) | அறத்தினூங்கு |
| 6 | அறத்தினூஉங் (குறள்4:2) | அறத்தினூங்கு |
| 7 | படாஅமை (குறள்4:8) | படாஅமை |
| 8 | போஒய்ப் (குறள்5:6) | போஒய் |
| 9 | தொழாஅள் (குறள்6:5) | தொழாஅள் |
| 10 | அளைஇப் (குறள்10: 1) | அளஇ (பாடபேதம்) |
| 11 | துன்புறூஉம்,இன்புறூஉம் (குறள்10:4) | துன்புறூம்,இன்புறூம் |
| 12 | நடுவொரீஇ (குறள்12:6) | நடுவொரீ |
| 13 | அதனினூஉங் (குறள்13: 2) | அதனினூங்கு |
| 14 | உடுப்பதூஉம்,உண்பதூஉம் (குறள்17: 6) | உடுப்பதூம்,உண்பதூம் |
| 15 | அறனழீஇ, புறனழீஇப் (குறள்19:2) | அறனழீஇ, புறனழீஇப் |

| | | |
|---|---|---|
| 16 | மரீஇ (குறள்23:7) | மரீஇ |
| 17 | இனிததூஉம் (குறள்23:10) | இனிததூம் |
| 18 | பெறாஅ (குறள்24:8) | பெறாஅ |
| 19 | புலாஅல் (குறள்26:7) | புலால் |
| 20 | விடாஅ, விடாஅ (குறள்35:7) | விடாஅ,விடாஅ |
| 21 | தவாஅப் (குறள்37:1) | தவா |
| 22 | தூஉய்மை, வாஅய்மை (குறள்37:4) | தூய்மை, வாய்மை |
| 23 | தவாஅது (குறள்37:8) | தவாஅது |
| 24 | தீதொரீஇ (குறள்43:2) | தீதொரீஇ |
| 25 | தழீஇய (குறள்43:5) | தழீஇய |
| 26 | தரூஉம் (குறள்44:4) | தரூஉம் |
| 27 | உறாஅமை (குறள்45:2) | உறாஅமை |
| 28 | படுப்பதூஉம் (குறள்46:10) | படுப்பதூம் |
| 29 | அழிவதூஉம், ஆவதூஉம் (குறள்47:1) | அழிவதூம், ஆவதூம் |
| 30 | குடிதழீஇக்,அடிதழீஇ (குறள்55:4) | குடிதழீ, அடிதழீ |
| 31 | கோலதூஉங் (குறள்55:6) | கோலதும் |
| 32 | பேஎய்கண் (குறள்57:5) | பேய்க்கண்டு |
| 33 | கடாஅ,உகாஅமை (குறள்59:5) | கடா, உகாஅமை |

*மூலக்குறளை ஒலிபெயர்ப்புச் செய்யும்பொழுது ஒற்று விடுபட்டிருத்தலையும், சில இடங்களில் சொற்கள் பாடவேறுபாட்டுடன் இருத்தலையும் காணமுடிகிறது. இவ்விடுபாடு குறளின் எல்லா இடங்களிலும் இல்லை. பெரும்பாலான இடங்களில் சரியாகவும் செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கமுடிகிறது. உ.ம்*

ஒற்றுவிடுபடல்

| மூலக்குறள் | மலையாள ஒலிபெயர்ப்புக் குறள் |
|---|---|
| • *வணங்காத் தலை (குறள்1:9)* | - வணங்கா தலை |
| • *துப்பார்க்குத் துப்பாய (குறள் 2:2)* | - துப்பார்க்கு துப்பாய |
| • *பொன்றாத் துணை (குறள் 4: 6)* | - பொன்றா துணை |
| • *போஒய்ப் பெறுவது (குறள். 5:6)* | - போஒய் பெறுவது |
| • *வாழ்க்கைத் துணை (குறள். 6:1)* | - வாழ்க்கை துணை |
| • *தற்காத்துத் தற்கொண்டான் (குறள்.6:6)* | - தற்காத்து தற்கொண்டான் |
| • *சொற்காத்துச் சோர்விலாள் (குறள்.6:6)* | - சொற்காத்து சோர்விலாள் |
| • *பெருஞ்சிறப்புப் புத்தேளிர் (குறள். 6:8)* | - பெருஞ்சிறப்பு புத்தேளிர் |

ஒற்று சரியாக வரும் இடங்கள்

| மூலக்குறள் | மலையாள ஒலிபெயர்ப்புக் குறள் |
| --- | --- |
| • பிறவிப்பெருங்கடல் *(குறள்-10)* | - பிறவிப்பெருங்கடல் |
| • வைக்கப்படும் *(குறள்-50)* | - வைக்கப்படும் |
| • உண்டாகப் பெறின் *(குறள் -54)* | - உண்டாக ப்பெறின் |
| • பெய்யெனப் பெய்யும் மழை *(குறள்-54)* | - பெய்யென ப்பெய்யும் மழை |
| • போலக் காயுமே *(குறள்-54)* | - போல க்காயுமே |
| • வேள்விப் பயன் *(குறள்-87)* | - வேள்வி ப்பயன் |
| • நோக்கக் குழையும் *(குறள்-90)* | - நோக்க க்குழையும் |
| • சொல்லிழுக்கப் பட்டு *(குறள்-54)* | - சொல்லிழுக்க ப்பட்டு |

பாடபேதம்

| மூலக்குறள் | மலையாள ஒலிபெயர்ப்புக் குறள் |
| --- | --- |
| • தலைகாண் பரிது *(குறள். 2:6)* | - தலைகாண்ப தரிது |
| • ஐந்தின் *(குறள். 3: 7)* | - ஐந்தன் |
| • மற்றெவ்வுயிர்க்கும் *(குறள்.3:10)* | - மற்றெவ்வுயர்க்கும் |
| • புறத்த *(குறள். 4:9)* | - புறத்தே |
| • ஒருவற்கு *(குறள். 4:10)* | - ஒருவர்க்கு |
| • வான்உறையும் *(குறள். 5:10)* | - வான் உறயும் |
| • தெய்வத்துள் *(குறள். 5:10)* | - தைவத்துள் |
| • வினையால் *(குறள். 7:3)* | - வினயால் |

பொருள் தொடர்புடைய குறளைச்சுட்டிக் காட்டுதல்

*இவர்தம் பனுவலில் குறள்களுக்குப் பொருள் விளக்கம் தரும் பொழுது பொருள் தொடர்புடைய குறள் அடுத்தடுத்து இருப்பினும் அல்லது வேறோர் இடத்தில் இருப்பினும் அவற்றைத் தம் விளக்கங்களில் நினைவுறுத்தி பொருத்தமாகச் சுட்டிச் செல்வதைக் காணமுடிகிறது. உ. ம்*

**அறத்தினூஉங் காக்கமும் இல்லை** *என வரும் 32ஆவது குறளுக்குப் பொருள் தருமிடத்து மொழிபெயர்ப்பாளர்* **சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு** *என வரும் 31ஆவது குறளின் பொருளை* **மேற்சொல்லியதனையே அனுவதித்தார்** *என்று பரிமேலழகர் உரைமுறையைப் பின்பற்றி நினைவுபடுத்தி பொருள் விளக்கம் தருகிறார். (பக். 66, 2013)*

**உரனென்னும் தோட்டியால் ஓரைந்தும் காப்பான்** *என வரும் 24ஆம் குறளுக்கு* **இன்பங்களைப் பெற்றுத்தரும் ஐம்புலனென்னும் வலிய யானையினை மனதில் நிறைந்திருக்கக் கூடிய குறிக்கோள் எனும் அங்குசத்தால் எவனொருவன் அடக்கி ஆளுகிறானோ அவன் இவ்வுலகில் வீடுபேற்றை அடையும் ஒரு வித்தாக விளங்குவான்** *(விஷய சுகங்கள் உளவாக்குன்ன பஞ்சேந்திரியங்களென்ன வலிய மத்தகஜத்தெ லக்~யபோதமுள்ள மனசென்ன பலம் நிரைஞ்ச அங்குசத்தால் எவனொருவன் அடக்கி ஆளுன்னுவோ அவன் மோக்ஷப் ப்ராப்தி நேடுவானாயி பூலோகத்தில் ஒரு வித்தாயி பரிணமிக்குன்னு)*

என்று பொருள்கூறும் ஆசிரியர் அதன் இறுதியில் (குறள் 138 காணுக) என்று குறிப்பிடுகிறார். (பக். 60, 2013) அதைப் போலவே **நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்** என வரும்138ஆவது குறளின் இறுதியில் (இந்தக் குறள் 24ஆம் குறளுமாயி சாம்யமுண்டு அதாவது கருத்து ஒத்திருப்பதாகக் குறிப்பிடுகிறார்.)

இதைப்போன்றே 26ஆவது குறளின் கருத்தை 972ஆவது குறளின் கருத்துடனும் 30ஆவது குறளினை 134ஆவது குறளின் கருத்துடனும் சேர்க்கின்றார். பிறவும் வந்தவழி கண்டு கொள்க. கட்டுரை என்பதனால் ஒருசிலவே எடுத்துக்காட்டப் பட்டிருக்கின்றன.

## மதிப்புரை

திருக்குறளைத் தமிழிலிருந்து மலையாளத்திற்கு மொழிபெயர்த்தவர்கள்; பலர் இருப்பினும்; திருக்குறளுக்கு முழுமையாக உரை எழுதியவர்கள் சிலரே. அவர்களுள் **வெண்ணிகுலம் கோபால குருப்பு, எஸ். ரமேஷன் நாயர், கெ.ஜி.சந்திரசேகரன் நாயர்** ஆகிய மூவர் மொழிபெயர்ப்புப் பனுவல் மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டதில் சந்திரசேகரன் நாயரின் மொழிபெயர்ப்பு பனுவல் உருவாக்கத்தில் சிறப்பாக இருப்பது அறியப்பட்டது. மூவர் நூலிலிருந்து குறள் முழுமையும் பார்க்கப்பட்டாலும் ஒருசில குறள்களே விளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

**திருக்குறள் விவர்த்தனம்** எனும் பெயரில் அமையும் வெண்ணிகுலம் கோபால குருப்பு அவர்களின் மொழிபெயர்ப்பில் எளிமையான மலையாளச்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. திருக்குறளின் மூலவடிவம் மொழிபெயர்ப்பில் இடம்பெறவில்லை. மொழிபெயர்ப்பும் மிகச் சுருக்கமான உரையும் மட்டுமே இடம்பெற்றுள்ளன. எஸ்.ரமேஷன் நாயரின் மொழிபெயர்ப்பு திருக்குறள் தமிழ்மூலம் - மொழிபெயர்ப்பு - சொற்பொருள் - கருத்து எனும் முறையில் அமைக்கப் பட்டுள்ளது. சந்திரசேகரன் நாயரின் மொழிபெயர்ப்பில் மூலக்குறள் மலையாள ஒலிபெயர்ப்பிலும் பின்னர் அதன் மொழிபெயர்ப்பும் இடம்பெற்றுள்ளது. முழுமையாக அல்லாமல் சில குறள்களில் சொற்களை மாற்றி பொருள் காட்டி யிருக்கின்றார். இம்முறையிலேயே பனுவலில் உரை அமைகின்றது. சொற்பொருளும் வாக்கியப்பொருளும்; அளித்து சொற்றொடரில் அமைந்த உட்பொருளை உரையாக்கி இணைத்து எழுதியிருக்கிற முறை மற்ற இருவரிலும் சிறப்பாக உள்ளது. அது மட்டுமல்லாமல் சில குறள்களுக்கு ஆய்வுரை வழங்கி இருப்பதும் சிறப்புக்குரிய தாகும். பால், இயல், அதிகார வைப்புமுறையில் இவர் பரிமேலழகரைப் பின்பற்றியிருக்கிறார்.

## துணைநூற்பட்டியல்


- Thirukkural - Thiruvalluvar Translated by Vennikkulam Gopala Kurup, Sahitya Pravarthaka Co-operative Society Ltd, Kottayam, Kerala State, December 1957 Reprint dec.1963, oct.1974, sept.1983 (Malayalam Language)
- Thiruvalluvar Thirukkural – Vivarthanam (Translated by) S.Ramesan Nair, DCB, Kottayam, Kerala State, First Publication Nov.1998, 3rd impression July 2014. (Malayalam Language)
- Thiruvalluvar Thirukkural – Samboorna basyam (Translated by) K.G.Chandrasekharan Nair, DCB, Kottayam, Kerala State, First Published May 2002, First DCB Edition oct.2003, 4rth impression May 2013, (Malayalam Language)
- **WWW.tamilauthors.com**